ந.க. எண் 100/2010 நாள் 14.05.2010

# ஆட்டையாம்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி
# சேலம் மாவட்டம்
# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஆட்டையாம்பட்டி பேரூராட்சியில் 2010-11ம் ஆண்டிற்கு அனைத்து பேரூராட்சிகள் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆட்டையாம்பட்டி பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 02.06.2010ந் தேதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை செயல் அலுவலர் அவர்களிடம் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரிடமோ நேரிலோ அல்லது தபால் மூலமோ கிடைக்கும் வண்ணம் அனுப்ப வேண்டும். 02.06.2010ந் தேதி முற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | ஒப்பந்தப் புள்ளி படிவம் விலை (வரிகள் உட்பட) (ரூபாயில்) | ஒப்பந்த தாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்திரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 15வது வார்டு ஸ்டாலின் காலனி காளியம்மன் கோவில் வீடு முதல் அன்னை அழகேசன் மில், காப்புகார கந்தசாமி வீடு வரை தார்சாலை அமைத்தல். | 10.00 | 20000/- | 3300/- | Class I to IV | 120 நாட்கள் |
| 2 | 9 வது வார்டு சந்தைப் பேட்டையில் வாரச்சந்தையில் பிளாட்பாரம் மற்றும் மேற்கூறை அமைத்தல். | 12.00 | 24000/- | 6600/- | Class I to IV | 120 நாட்கள் |
| 3 | 13வது வார்டு ரத்தினவேல் கவுண்டர் காட்டில் 30000 லி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல். | 2.85 | 5700/- | 1650/- | Class I to V | 120 நாட்கள் |
| | மொத்தம் | **24.85** | | | | |

## நிபந்தனைகள்

1. டெண்டர் ஷெட்யூல் மற்றும் டெண்டர் டெபாசிட் 01.06.2010ம் தேதி பிற்பகல் 5.00 மணி வரை தொகையினை அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

2. அளவுகள் மேலளவுகள் சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்களால் எடுக்கப்பட்ட பின்னரே பட்டியல் தொகை காசோலையாக வழங்கப்படும்.

3. பணிகளை துவங்கும் முன்னரும், பணிகள் நடைபெறும் பொழுதும் பணி முடிவுற்ற **பின்னரும் ஒவ்வொரு நிலையிலும் புகைப்படங்கள் மூன்று நகல்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

4. வேலைக்கு பயன்படுத்தப்படும் சிமெண்ட், இரும்பு கம்பிகளின் தரம் ஆகியவைகளுக்கு சோதனை சான்று பெறப்பட்டு ஒப்படைக்க வேண்டும்.

5. பணிக்கான உத்தரவு வழங்கப்பட்டவுடன் மூன்று தினங்களுக்குள் ரூ.20.00 மதிப்புள்ள பத்திரத்தில் ஒப்பந்தம் எழுதி தரப்பட வேண்டும்.

6. பணிகள் நடைபெறுமிடத்தில் பணிகள் பற்றிய விவரங்களை தெரிவிக்கும் தகவல் பலகை ஒப்பந்ததாரர் சொந்த செலவில் வைக்கப்பட வேண்டும்.

7. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள் 2000 (அரசாணை 445 / நிதிதுறை நாள் 26.09.2000 மற்றும் அரசாணை 446/ நிதித்துறை நாள் 26.09.2000) விதிமுறைகளின் படி பணியினை செய்து முடிக்க வேண்டும்.

8. ஒப்பந்ததாரர்களின் சொத்து மதிப்பு ரூ.10.00 இலட்சத்திற்கு குறைவாக உள்ளவர்கள் டெண்டர் நிராகரிக்கப்படும் மற்றும் கட்டிடம் கட்டும் பணியில் ரூ.20.00 இலட்சத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டப்பட்டு முன் அனுபவம் தேவை.

9. ஒப்பந்ததாரர்கள் 2010-11ம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர் பதிவு புதுப்பித்திருக்க வேண்டும்.

10. மற்ற நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

<u>**குறிப்பு:**</u> மேற்காணும் பணிகளில் ரூ.5.00 இலட்சம் அதற்கு மேல் உள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பேரூராட்சி இணையதளம் http://townpanchayats.tn.gov.in/tender மற்றும் ரூ.10.00 இலட்சம் உள்ள பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை தமிழ்நாடு அரசு இணையதளம் www.tn.gov.in/tender என்ற இணைய தள முகவரியிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**ஒம்/- க. முருகப்பிரகாஷ் B.A., D-Co.Op.,**
**தலைவர்,**
**ஆட்டையாம்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி**
**சேலம் மாவட்டம்.**

**(ஒம்) இரா. கோவிந்தன்.,**
**செயல் அலுவலர் (பொ),**
**ஆட்டையாம்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்.**